உளி- 1 | ஓசை-59 | பிப்ரவரி-2022 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

ஆசிரியர் : ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி
மதன் குமார்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

அட்டைப்படம் :
திண்டுக்கல் தமிழ்பித்தன்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
✆94893 75575

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

முகமது பாட்சா - 4
வீரமணி - 5
அமுதா தமிழ்நாடன் - 6
சௌவி - 7
ரகுநாத் வ - 8
வீரசோழன்.க.சோ. திருமாவளவன் - 9
சரண்யாசத்தியநாராயணன் - 10
நிலாட்ஸ் ஐகொரா - 11
ஐ.தர்மசிங் - 12
தி.கலையரசி - 13
சந்துரு ஆர் சி - 14
நேசன் மகதி - 15
சம்பத் கிருஷ்ண குமார் - 15
தங்கராஜ் பழநி - 16
கிறிஸ்டினா அருள்மொழி - 17
லக்ஷ்மி - 17
ப்ரியா பாஸ்கரன் - 18
ஆனந்த குமார் - 19
ராம் பெரியசாமி - 20
வில்லியம்ஸ் - 21
மகிழினி காயத்ரி - 22
அகதா - 23
நித்யா சபரி - 24
கா வெங்கடேஸ்வரன் - 24
உமா மஹேஸ்வரி பால்ராஜ் - 25
கோ.ஸ்ரீதரன் - 25
சுயம்பு - 26
அலர்மேல்மங்கை - 27
மா.காளிதாஸ் - 28
சுப. முத்துக்குமார் - 29
தீபிகா நடராஜன் - 30
மு.முபாரக் - 30
பிரபுசங்கர் க - 31
மகேஷ் சிபி - 32
காயத்ரி ராஜசேகர் - 32
ஆகிஷா - 33
நயினார் - 34
ம.இராதா - 35
அன்பூ - 36
துளசி வேந்தன் - 37
ஷீபா ராணி - 38
கதிரவன் வீ - 38
வலங்கைமான் இராம வேல்முருகன் - 39
அன்பிஷா - 39
சே கார்கவி - 39



விபத்திற்குள்ளான நீதியைப் பார்த்து
ஆளாளுக்கு
இச்சுக் கொட்டிவிட்டு நகர்கிறார்கள்!
யாராவது காப்பாற்றுங்கள் என்று கதறும்
துடிப்பை
அவசர அவசரமாக அலைப்பேசியில்
படம் ஆக்குகிறவன்
எப்படியும் காசாக்கிவிடுகிறான்!
நாடித்துடிப்புகளின் வேகம் குறையக் குறைய
நாக்கைச் சுழற்றும் நாய்
நாற்புறமும் பார்த்துக் காத்துக் கிடக்க.....
உயிருக்குப் போராடுகிறவன் அநீதி என்று
அறிக்கை வாசிக்கப் படுகிறது!
சற்று முன் வந்த செய்தி
“அங்கு அப்படி எந்தவொரு விபத்தும்
நடக்கவில்லை!”
.

◈ **முகமது பாட்சா**



எத்தனைமுறை
எழுதிப்பார்த்தும்
அம்மாவைப்போல்
அழகில்லை
எந்த அம்மா
கவிதையும்

சொல்லில்
இறக்கிவைக்க முடியாத
பேரன்பின் பிம்பமாக
அள்ளி அணைக்க
முடியாத
கடவுளின் நிழலாக
கைவிடப்படுகிறது
பிறிதொரு
அம்மா கவிதை

அடித்தும் திருத்தியும்
நிறைவடையாமல்
அழிக்கப்பட்டுவிட்டது
இன்னுமொரு
அம்மா கவிதை

உயிர்ச்சொல்லும்
கவிச்சொல்லும்
சிறைபிடிக்க
முடியாத
உயரத்தில் நின்று
தவிக்க விடுகிறது
எழுதி முடிக்க
இயலாத ஒரு
அம்மா கவிதை

பொழியாமல்
நகர்ந்துவிடும்
முகிலாக
சட்டென கொய்து
சூடிக்கொள்ள முடியாத
நிலவாக
கைசேராமலே
கடந்துவிடுகிறது
இன்றும் ஒரு
அம்மா கவிதை

தடுக்கி விழுந்த
போதெல்லாம்
அள்ளி அணைத்துக்கொண்ட அன்பின் கதகதப்பை
பேரன்பின் ஆதுரத்தை

வார்த்தைகளில்
நகலெடுக்க முடியாமல்
கைவிடப்படுகிறது
மீண்டும்
ஒரு அம்மா கவிதை

கைவிடப்பட்ட
எழுதிமுடிக்காத
கவிதையையும்
வாசித்துவிட முடிகிற
உங்கள் இதயத்திலும்

அழித்துவிட முடியாத
ஒரு அம்மா கவிதை
இருக்கலாம்

◈ **வீரமணி**



காபிக்கு டிகாஷன்
போட்டு முடிப்பதற்குள்
ஒருமுறை

வெந்து கொண்டிருக்கும்
இட்லிக்கும்
கொதித்துக் கொண்டிருக்கும்
சாம்பாருககும் இடையில்
ஒரு முறை

ரசத்திற்கு தாளித்துக்
கொட்டிய கடுகு
கருகிப்போனதைப் பற்றி
கவலைப்படாமல் ஒருமுறை

தேநீர் கேட்டு காதில்
விழும் இணையரின்
குரலைத் தள்ளிவைத்து
ஒரு முறை

குளித்து முடித்த
கூந்தலின் ஈரம் உலர்வதற்குள்
ஒரு முறை என

அடுப்படியில்
வெந்து நொந்து
கொண்டிருக்கும்
என்னைப்போன்றவர்களுக்கு
முகநூலில்
போட்ட பதிவின்
விருப்பக்குறியீட்டை
எட்டி எட்டி
பார்ப்பதிலேயே
ஒவ்வொரு நாளும்
ஆசுவாசமாய் நகருகிறது....

◈ அமுதா தமிழ்நாடன்



அதிகார அரிப்பெடுத்து
சொரிந்து கொள்கிறார்கள்
சொரிதல் சுகம்தான்
சொரியச் சொரிய சுகம்
ரணமாகிவிடுமென்பதை
அவ்வளவு தெளிவாய் ஏற்றுக்கொள்வதில்லை
அதிகார போதைக்கு அடிமைப்பட்டவர்கள்

வங்கியில் காசாளராயிருக்கும்
திருமணமாகாத இளம்பெண்
தன் தந்தை வயதுடையவரை வைகிறாள்
தெளிவாக எழுதுவதில்லை என
கடுகடு முகத்தோடு

தள்ளாடியபடி
தடியூன்றிக்கொண்டு இறங்கும் முதியவரை
மரியாதையின்றிச் சபிக்கிறான்
இளவயது பேருந்து நடத்துனர்

இறந்த கணவனின்
தொடர் ஓய்வூதியத்தை
வாங்க வந்த பெண்ணிடம்
கோபமாய்ப் பேசித் தூக்கி எறிகிறாள்
கொடுத்த தாளொன்றை
அஞ்சலகத்து அதிகாரியொருத்தி

தோளில் துண்டு போட்ட
லுங்கியணிந்த முதியவர்
கடந்த பதினைந்து நாட்களாக
தினமும் மின்சாரத்துறை அலுவலகத்தில்
தட்டுப்படுகிறார்
கவலை தோய்ந்த முகத்தோடு
மஞ்சள் பைக்குள் வைக்கப்பட்ட
தாள்களோடு

நோயாளி என்றும் பாராமல்
கடுஞ்சினத்தைக் கொட்டுகிறான்
மெத்தைப் படுக்கை கிடைக்குமா எனக்கேட்டவனை
அரசு மருத்துவமனையின் பணியாளனொருவன்

அன்பை வாஞ்சையை கருணையை
எங்கே ஒளித்து வைத்துக்கொண்டார்கள்
இவர்களெல்லாம்?

உங்கள்
அதிகாரம் ஆணவம் அலட்சியம்
உங்களைத்தான் கொன்றுகொண்டிருக்கிறது
உங்களுக்கே தெரியாமல்

பாவம் நீங்கள்

◈ **சௌவி**

# அவளொரு வண்ணத்துப்பூச்சி



பூக்களை
நேசிக்கத்தெரியாதவள் என்கிறீர்கள்
அவளே பட்டையுரிக்க
மரங்களை வளர்க்கிறாள்

இறுமாப்போடு கர்வம் கொண்டு தனித்துத்திரிபவள்
என்கிறீர்கள் அவள்தான் இலக்கியத்தோடு
கொஞ்சு மொழி பேசுகிறாள்

எழில் ஓவியமாகி
பறந்து மணம் பரப்பி வண்ணங்களால்
மயக்கமடையச்
செய்யும் உங்கள் வண்ணத்துப்பூச்சியல்ல
அவள்

கருமைபூசிக்கொண்டு கால்கொலுசு நடனமாட
பாசிகளின் பவளங்களில் வீரியமிக்க உலா
வருபவளல்ல அவள்

'கருத்துச்செறிவில்
ஒளி பீய்ச்சி
நாவினில் தமிழ் முழங்க
எழுத்துப்பிள்ளைகளை
தோளில் சுமந்து வரும்
புரட்சிக் கருங்குயிலவள்'

ஆம்!
சிறகுகளற்ற
வண்ணங்களற்ற
பறத்தலை நிதமும்
புரிகிறாள்

அவளே என்றும்
புத்தாக்கம் புனையும்
வண்ணத்துப்பூச்சி

ஆம்!
சிறகுகளற்ற
வண்ணங்களற்ற
பறத்தலை நிதமும்
புரிகிறாள்

எனக்கு
அவளொரு
வண்ணத்துப்பூச்சி!

◈ ரகுநாத் வ



மீட்டப்படாத வயலினில்
ஒளிந்திருங்கிறது
உனக்கான என் பேரன்பு...

நாடி துடிக்கிறதா
கிராமத்து மருத்துவச்சி
கை பார்த்து சொல்லும்
இங்கிதங்களில் நானும்
இருக்கிறேன்...

அறையின் ஓரத்தில்
மௌனமாய் ராகம்
இசைக்கிறது
ஒற்றை வயலின்.

◈ வீரசோழன்.க.சோ. திருமாவளவன்



பூவரச கிளையில்
இரு பறவைகள்
ஒன்று விட
மற்றொன்று தொடரயென
வேகமாக மாறி மாறி கீச்சிட்டுக்கொண்டிருந்தது..
என்ன தான் பகிருகின்றது பறவைகள்
ஒரு இருதய வடிவ இலைக்கு
வட இடமாக அமர்ந்தபடியென்று
புரியாமல் ஆழ்ந்த சில
மணியிலேயே இவ்வொற்றை இலை
காற்றின் வேகம் தாங்காமல்
கிளையிலிருந்து
ஊஞ்சலாடி உதிர்ந்தது..
அடுத்த நொடி
இரண்டில் ஒரு பறவையும்
அங்கிருந்து படபடவென
வானோக்கி பறந்தது..
தலைகுனிந்து
தனித்திருக்கும் பறவையின்
மௌனம் அப்பொழுது தான்
மெல்ல என்னிடம் புரியும் படி
பேசத்தொடங்கியது.

◈ சரண்யாசத்தியநாராயணன்



இரவு உணவு முடித்து
படுக்கைக்கு
சென்று விளக்கணைத்தோம்

நான் முகநூலை
தழுவிக் கொள்கிறேன்

மனைவி
நெட் பிளிக்சில்
முகம் புதைக்கிறாள்

குளிருக்கு இதமாக
மகன் ஃப்ரீ ஃபயரை
கட்டியணைத்து கொள்கிறான்

எங்களை
தூங்க வைக்கும் முயற்சியில்
தோற்றுப் போய்
அறையின் ஒரு மூலையில்
கண்ணயர்ந்து
உறங்கிக் கொண்டிருக்கிறது
இந்த இரவு..

◈ **நிலாட்ஸ் ஐகொரா**



- பிரமிக்கும் அனுபவம்
  கொடுத்தாலும் பெற்றாலும்
  அழகானது நன்றி...

- தலை நிமிருகிறதே
  தாவரங்களுக்குத்தான் புரியுமோ
  விழும் மழையின் மொழி...

- இருளிலும் நடக்கிறேன்
  எஞ்சிய வெளிச்சத்தின் நிழலாய்
  அப்பாவின் தடங்கள்...

- மகளின் சிரிப்பு சப்தம்
  தேவதையாக பறக்கிறேன்
  கற்பனை வானில்...

- ஓடுகிறது ரத்தம்
  ஒற்றுமையாக ரசிக்கிறார்கள்
  சேவல் சண்டை...

◈ **ஐ.தர்மசிங்**



- காதல் நிரம்பிய தேசம் நான்.
  என் அன்பின்
  சர்வாதிகாரி நீ.

- நான் உன்னை நெருங்குவதில்லை.
  தள்ளி நிற்கும் போது
  சுவாரஸ்யமாகத் தெரிகிறாய்.

- விசித்திரமான மழை நீ.
  உன்னில் நனையும் போது
  முழுதுமாக எரிகிறேன்.

- என் கண்ணீர்க் கடலில் மிதக்கிறாய்
  மூழ்கிப் பார் !
  அதன் ஆழம் புரியும்.

- உனக்கான காதல் என்பது
  என் அந்தரங்கத்தின்
  வெளிப்படையான அறிக்கை.

- உன் மழையில் நனைவது
  இன்பமான தருணம்.
  காய்ச்சல் பெறுவது பற்றி
  கவலையே இல்லை.

- நீ பார்வையால் எழுதுகிறாய்.
  நான் அதை
  சொற்களால் மொழி பெயர்க்கிறேன்.

- மின்னல் மீது
  உனக்கொரு கவிதை எழுதுகிறேன்.
  இடி இசையமைக்க
  மழையை அரங்கேற்றுகிறாய் நீ !

◈ **தி.கலையரசி**

# அனல் தழுவிய காலம்



எங்கள் சிறகுகளின் மேல் வலுவேற்றுவதாய்ச்
சொல்லி
நுகர்ந்தறியா
சில திரவியங்களை
வலிந்து பூசினார்கள்.
சந்தேகத்தின் கண்கொண்டு நாங்களதை
மறுதலித்தபோது பசித்திருந்த எங்களின்
இரைப்பைகள்
அறுசுவை கனவுகளால் பூட்டப்பட்டது.
சொப்பனங்கள் மெல்ல இளைத்து
நாங்கள்
அலைகழிக்கப்பட்டபோது
வேர்கள் அழுகிய புற்களின் வனாந்திரத்தில்
எங்கள் நம்பிக்கைகள்
குடியேற்றப்பட்டது.
இருண்ட குகைகளில்
கார்மேகச் சித்திரங்களை
எழுதி தினமும் ரசிக்கச்சொல்கிறார்கள்.
ஏமாற்றங்களால்
எங்கள் கனவின் நிறங்கள்
ஒவ்வொன்றாய் உதிர்வதை தினமும் காண்கிறோம்.
முந்தைய நாட்களில் நறுமணங்களுடன்
கை வீசிச்சென்ற இவ்வழியில்
தீய்ந்த வாசமொன்று
எங்களை விடாமல்
துரத்திக்கொண்டே வருகிறது.
திணறடிக்கும் அவ்வாடை
வருகின்ற திசையை
கண்ணுக்கெட்டியவரை
பார்வைகளால் அகழ்ந்து
யூகிக்க முடியாமல் திகைக்கிறோம்.
தீய்ந்த வாடை மேலும் எங்களை சமீபிக்கிறது.
அனல் காற்றின் பெருஞ்சூடு
அடி வயிற்றில்
சுள்ளென உரைக்கும் போதுதான்
அறிந்துகொண்டோம்
திரவியம் பூசப்பட்ட
எங்கள் சிறகுகள்
பொசுங்கும் வாடையை...

◈ சந்துரு ஆர் சி



அர்ச்சனை முடித்து
சூடம் காண்பிக்கும் தருணங்களில்
வீபூதியை மற்றவர்களுக்கு கையிலும்
குழந்தை என்றதும்
நெற்றியில் பூசிவிடும்
அர்ச்சகர் சொல்லாமல் சொல்லிச்செல்கிறார்
குழந்தைதான் தெய்வமென்று.....!

**◈ நேசன் மகதி**

யேசு சாமிக்கு
நாலு ஆணி
எங்க சாமிக்கு
ஒரு ஆணி போதும்
அவங்க சாமிக்கு
ஆணியே வேணாமென்று
சொல்லும் நமக்குள்
யாரும்
ஏற்றுக் கொள்வதாயில்லை
அந்த
நான்கு சுவர்கள் தான்
கோவில் என்பதை.

**◈ சம்பத் கிருஷ்ண குமார்**

# அண்டர்டேக்கருக்கு ஏழு உயிர்

இருள் படர்ந்த
கல்லறைத்தோட்டத்தில்
தேவாலய மணியோசையுடன்
மறித்துப்போன ஒருவனின்
உயிர்த்தெழுதலுக்காகக்
காத்திருக்கும் மனநிலைக்கு
நம்மை இழுத்துச் செல்லும்
அண்டர்டேக்கரின் நுழைவில்
இசைக்கப்படும் இசை...

கருவிழிகளை இமைகளுக்கு மேலே
புருவம் வரை இழுத்துப்
பொருத்திக்கொள்ளும்
அவரின் கண்கள்...
தொப்பியைக் கழட்டியபடி
அவரதை
நேர் செய்யும் வரையிலும்...
மரணபீதி
எதிர்த்து சண்டையிடப்போகிறவனின்
பிடரியில் அமர்ந்திருக்கும்...

ஹல்க் ஹோகன் முதல்
ஜான் சீனாவரை
ஹீரோக்கள் ஒவ்வொருவராய்
மாறிக்கொண்டிருந்தும்...
அவர்கள் எல்லோரையும்
பயமுறுத்தும் ஒரே வில்லனாய்
அண்டர்டேக்கர் இருந்தார்...

தலைகீழாக தூக்கி
கவட்டையை தலைக்குள்ளிட்டு
முட்டி போட்ட நிலையில்
எதிரியின் தலையை தரையிலடித்து
கழுத்தை முறித்துப்போடும்
டாம்ப்ஸ்டோன் பைல்ட்ரைவர்
என்றழைக்கப்படும்
தடைசெய்யப்பட்ட மல்யுத்தயுக்தி
அண்டர்டேக்கருக்கே
உரித்தான ஒன்று...
"தூக்கி அடிச்சுருவேன் பார்த்துக்க"
எனும் வாக்கியம்
கேப்டன் விஜயகாந்துக்குப்பின்
அண்டர்டேக்கருக்கே
பொருத்தமானதென்பதை நிரூபிக்கும்
அவருடைய சோக்ஸ்லாம்...

தோற்கடிக்கப்படும்
ஒவ்வொரு முறையும்
சவப்பெட்டிக்குள் தள்ளி
புதைக்கப்பட்டோ எரிக்கப்பட்டோ
சாகடிக்கப்படும்
அண்டர்டேக்கர்...
சிறிய இடைவெளிக்குப்பின்,
நல்ல நாளொன்றில்
அவரின் சக்திகளடங்கிய
கலசத்தை அவரது நிர்வாகி
பால் பியரர் தூக்கிவர...
தீப்பந்தம் ஏந்தியவர்கள்
இருபுறமும் சூழ்ந்திருக்க...
சவப்பெட்டிக்குள்ளிருந்து
உயிர்த்தெழுந்து வரும்
அண்டர்டேக்கர்
எதிரியை பயத்தின் உச்சிக்கே
அழைத்துச் சென்று வீழ்த்துவதோடு
முடிவுக்கு வரும்
இருவருக்கிடையேயான பகை...

இதுவரை ஐந்துமுறை மறித்து
ஆறாவது உயிரில் வாழ்ந்துகொண்டிருக்கும்
அண்டர்டேக்கருக்கு
ஏழு உயிர் இருப்பதாகக் கூறப்பட்டாலும்...
இனியும் மறித்தால்
உயிர்த்தெழும் வாய்ப்பில்லை
என்பதை அறிந்திருப்பதாலேயே,
இப்போதெல்லாம்
எந்த வம்புக்கும் போகாமல்
அவரது தோட்டத்திலமர்ந்து
மதுவருந்தியபடியே
ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்...

◈ தங்கராஜ் பழநி





மகரந்தம் சுமந்து செல்லும்
பட்டாம்பூச்சியை விட்டுவிடுங்கள்
சூல் கொள்ளக் காத்திருக்கின்றன கானகத்து
மலர்கள்...

வீசும் கர்ப்ப வாசனையில் படபடக்கும் சிறகுகள்
கவிதை...

காமம் திறக்கும் காதல் வாசகத்தில்
விரசமிருப்பதில்லை இயற்கையில்
மனிதரைத் தவிர...!!!

◈ **கிறிஸ்டினா அருள்மொழி**

சுயம் வெறுத்த நாளின் இறுதியில் உடைந்து
சிதறுகின்றன மனத்துண்டுகள்!

இறப்பு மட்டும் வாழும் பூமியைத் தேடி அலையும்
பிம்பத்தின்
முகத்தில்
மௌன அழுகையின் ரேகைகள்!

எந்த சமாதானங்களும்
ஆறுதல்களுமின்றி
காற்றுவெளியில்
உயிர் உருகும் சத்தம்
எனக்கு மட்டுமே கேட்கிறது!

அது நான் இல்லை!
என் ஆன்மா என்பது
யாருக்குத் தெரியும்!

◈ **லக்ஷ்மி**

# புதிரான பீனிக்ஸ் பறவை



சுரணையிழந்து
ஓடிக்கொண்டிருக்கின்றன
நாள்கள்

முற்றிப் பழுப்பெறிந்து
இலையுதிர்த்த காலத்தில் தவிக்கிறாய் சிக்குண்டு

வாழ்க்கை இலகல்ல
எப்பொழுதும்

நேற்றைய சொல்லாடலிலும்
நாளைய எதிர்பார்ப்பிலும்
வெறுமையாய்க் கரைகிறது
இன்று

ஒவ்வொரு நொடியும்
கிடக்கையின் மைல்கல்லாய்
நீள்கிறது

உந்தன் நினைவுகளை
கொல்லாமல் கொன்று புதைக்கிறேன்
வித்தாய் என்னுள்

உன்னிடம் திருப்பி தர
என்னிடம் ஏதுமில்லை
உன்னால்
பெரும் பிரவாகமாய்ப் பெருக்கெடுக்கின்ற
கவிதைகளை விட

நான் நானாகயிருக்க
நீ நீயாக மீண்டெழுந்திரு
பீனிக்ஸ் பறவையாய்

ஏனெனில்
நாளையுங் கூட
நானாகயிருக்கவே அவாவுகிறது
உள்ளம்.

◈ ப்ரியா பாஸ்கரன்



கம்மல் வாங்குவதற்கு
கடையையே புரட்டி
போடுவேன்..

புடவை தேர்வு செய்ய
நான்கைந்து கடைகளாவது
ஏறி இறங்குவது வழக்கம்..

பொருத்தமான
நகைகளுக்கு அலைவது பிடித்தமான
பொழுதுபோக்கு..

படிப்பும் என் முடிவுப்படி..

சம்பந்தம் மட்டும் பேசி முடிவு செய்து
புகைப்படம் காட்டி
மாப்பிள்ளை என்றார்கள்..

இப்போதும்..
திருமண துணிகள்
தேர்வு செய்ய எனக்கு முழு
சுதந்திரம் உண்டென்கிறார் அப்பா..

◈ ஆனந்த குமார்



அவனுக்கென்று ஒரு பெயர் இருக்கிறது
அவனை நான் பெயர் சொல்லி அழைத்ததில்லை
விசிலடித்தோ கைத்தட்டியோ
அழைத்ததும் இல்லை
கண்களால் நூறு முறையாவது அழைத்திருக்கிறேன்

என் பெயரை சொல்லி அவன் அழைக்கையில்
நான் புன்னகையோடு திரும்புவேன்
சட்டென புன்னகைத்து பூத்து விடுவான்

அவன் புன்னகையின் சப்தம் எனக்கு கேட்கிறது
அவனுக்குள்ளும் கேட்கிறது

பிரபஞ்ச காதுகளின் வழியாக ஒரு இசை எங்கள்
இருவரையும் கேட்கச் செய்கிறது

நீங்கள் எந்த ரகசியத்தையும் அவனை வைத்துக்
கொண்டே பேசலாம்

ஏனென்றால் உலகில் ரகசியம் இல்லாத ஒருவன்
அவனே

**ராம் பெரியசாமி**

# சிறப்பு விருந்தினர்



சுழல் நாற்காலி மீது
படமெடுத்து அமர்ந்திருந்தவருக்கு
கூட்டாண்மைக்காரத் தோற்றம்

பாதுகாப்பான தூரத்திலிருந்து
உங்களைப் பற்றிச்
சொல்லுங்கள் என்கிறான்
பேட்டியாளன்

நான் அதிரூபன்
ஆதிசேஷன்
ஆலகாலம்
மூலப்பரிகாரம்
நான் முத்தமிட்டால்
முக்தி அடைவீர்கள்

கடவுள் அவதாரமா

நானன்றி வேறேது தெய்வம்
சிவனென்
இடுப்பிலிருப்பதால்
பரம்பொருளும் நானே
அகம் பிரம்மாஸ்மி

ஊர்ந்து வாழும் சாபம் குறித்து
சங்கடமில்லையா

கண்ட மறுகணம்
தண்டுவடம் நடுங்க வைக்கும்
அங்க அமைப்புக்கு
சங்கடப்படுவானேன்

கீரியோடு அப்படியென்ன
முன்விரோதம்

யார் கூறியது
அதுவோர் வீரவிளையாட்டு
ஜல்லிக்கட்டுக்கும் முந்தையது
நகக்குறிகளை ரசிப்பதில்லையா
பற்குறிகளில் ரத்தம் துளிர்ப்பது
பரவச அனுபவம்

வட்டமிடும் கட்டுக்கதைகள் பற்றி

ஏற்கனவே ஒளிரும்
ஐந்து தலை ரத்தினக்கல்லுடன்
ஆமைக்கும் கயிருக்கும்
பிறந்தது தான் பாம்பினமென
புதிதாயொன்றை
கிளப்பி விடுங்கள்

இசை பிடிக்குமா

காதில்லை
கவலையில்லை
கண்களால் ரசிக்கும்
நயனாவதானி நான்

மனிதர்கள்..

எல்லாம் அல்ல
ஒரு சிலர் மட்டும்
கொடிய விஷம்
கண்டாலே நீலம் பாரிக்கும்

◈ வில்லியம்ஸ்



கூட்டாஞ்சோறு
படைக்கும்
குழந்தைகளின்
கோவிலில்
அவராகவே
அவரியல்புப்படி
அப்படியே இருப்பதை
உணர்கிறார் கடவுள்

ஆலமரப்பிள்ளையாரின்
மீதிருக்கும் காக்கை எச்சம்
துடைக்கும் சிறுமி
கைகளில் ஒரு நொடி
நின்று தவழ்கிறது
ஆதிக்கடவுளின்
காற்று

கருவறை விட்டு
நகருலாவிற்காக
வெளியேறும் கடவுள்
தன்னை பொம்மை போல்
பாவித்து அதிசயிக்கும்
குழந்தையின் விரல் பிடித்து
நடை பழகுகிறார் சிறிது நேரம்

விழிக்கதவை மூடி
மனக்கதவைத் திறந்தால்
அன்பின் வடிவில் இருக்கும்
கடவுளுக்குப் பெயரேதும் இல்லை

குழந்தைகள் ஆடும்
ஊஞ்சலில்
அமர வேண்டி
வரிசையில்
நின்றார் கடவுள்

தான் வரையும்
எல்லாக் கடவுளின்
முகங்களிலும்
அம்மாவின் அன்பையே
பதிக்கிறது குழந்தை
வசிகிரமாகிறார் கடவுள்

◈ மகிழினி காயத்ரி



அத்தையின் பிணம் நடுவீட்டில்
திருமணம் செய்துகொள்ளாமலேயே அவள்
இறந்தது பற்றி ஊரார் கிசுகிசுத்தனர்
அழகாக இருக்கும் அத்தையின் பின்னால் யார்
யார் காதல் வயப்பட்டனர் என்பதை நானும் ஊரும்
கொஞ்சம் அறிவோம்
அத்தைக்குப் பிடித்த சரவணன் மாமா இப்போது
எங்கிருக்கிறார் என்பதை உள்ளூர ஒருமுறை
கேட்டுக்கொண்டேன்
திமிராக இருக்கும் அவள்
முதன்முறை வெட்கப்பட்டது துல்லியமாக ஞாபகம்
வந்தது
புன்னகையோடு அவள் டேப் ரெக்கார்டரில் கேட்கும்
இளையராஜா பாடல்களை நன்கு அறிவேன்
எல்லோரும் அழுது முடித்த இந்த இரவுப்பொழுதில்
துண்டால் முகத்தை மறைத்து விசும்பியபடி
வானம் பார்த்து ஒரு முகம் ஊரின் எல்லையில்
அமர்ந்திருந்தது
அந்த உருவத்திற்கு
சரவணன் மாமாவின் சாயல்தான்

◈ **அகதா**



மழையென்றால்
தேநீரும் இசையும்
காதலும் கவிதையுமென
மனனம் செய்துவிட்ட நம்
மனதைப்போலவே....

கொடியில் காயும் துணியும்
மொட்டை மாடி வத்தலுமென
மனனமாகியிருந்தது
அம்மாவின் மனதில்.....

**◈ நித்யா சபரி**

உண்டு உமிழும் மிச்சத்தில்
உலகத்தின் செழிப்பை
உருவாக்கும் பறவைக்கேது ஆசை
ஆசை துறந்தவனை
புத்தன் என்று சொல்லிக்கொண்டு
இன்னொரு புத்தனாய் மாற
முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள்
நானோ..........
உதிர்ந்த பறவையின்
இறகுகளை சேமித்துக்கொண்டிருக்கிறேன்
ஒரே............ ஒருமுறையாவது
பறவையாய் மாற.

**◈ கா வெங்கடேஸ்வரன்**



அவ்வளவு பிடித்தங்களையும்
இறுக்கிக் கொள்ளாமல்
இலகுவாய் இறக்கி விடுகிறேன்

நகரும் உன் மௌனங்களை
ஈடு செய்யும் வார்த்தைகளுக்குப்
பஞ்சம் என்னிடம்

கவனமாய் சேர்க்க என்னும்
என் நரம்பின் முத்துக்களை
சிதறாத எண்ணங்களாய்
முழுமைக்குள் அடுக்கிவிட

முற்றுப் பெறாத அவைகளிடம்
பேசாது நகர்கிறது விடுட்ட காற்று....

◈ **உமா மஹேஸ்வரி பால்ராஜ்**

என் பால்கனியிலிருந்து
கூப்பிடு தூரத்திலிருக்கிறது
காம்பவுண்ட் தாண்டி
கிளைத்திருக்கும்
எதிர் வீட்டு அரை நெல்லி.
இங்கிருந்து அதட்டினால்
ஓடி விடக்கூடியவர்கள்தான்
அதை உலுக்கும் ஒல்லி சிறுவர்கள்.
பொதுவாய்
கண்ணெட்டும் தொலைவில்
இருப்பதில்லை பால்யம்.
கண்ணெட்டும்
தொலைவில்தானிருக்கிறது
என் பால்யம்.....

◈ **கோ.ஸ்ரீதரன்**



- பென்சிலை சீவி
  ஒரு மரத்தை சாய்த்து விட்டுத்தான்
  எழுதினேன்
  மரங்களை வெட்டாதீர்

- நாம் அருகிலருகில்தான் இருக்கிறோம்
  நம் விசாரிப்புகள்தான்
  தொலைவிலிருக்கிறது

- கையில் காயம்
  கட்டுபோட கைக்குட்டையை
  தருகிறாள் காதலி
  முந்தானையை கிழிக்கிறாள்
  "அம்மா"

- கிணற்றை தூர்வாரிவிட்டு
  காசு கேட்கிறான் தொழிலாளி
  தட்டிக் கழிக்கிறார்
  மனம் தூர்வாராத முதலாளி

- நெல்மணியிட்ட
  ஜோசியகாரனுக்கு
  சோறிடுகிறது கிளி

- குழந்தை பேறுயில்லாத
  தம்பதியர்கள்
  மனைவியின் பேர் மட்டும்
  "மலடி"

- ஆடையை கழற்றி விட்டு
  நிர்வாணத்தை அணிந்து கொள்கிறது
  "நாகரீகம்"

- சாதிச் சண்டை
  தரையில் விழுந்தது
  சமத்துவ நிழல்

- வெயிலுக்காய் ஒதுங்கினேன்
  குத்தவில்லை
  முள்மர நிழல்

- தரையில் முத்தமிட்டுக் கொள்கிறது
  உதிர்ந்தப் பூ

**சுயம்பு**



அழைக்காத
ஒருவருக்காக
எத்தனை முறை தான்
அலைபேசியை
பார்த்துக்
கொண்டிருப்பீர்கள்...

இன்னும்
எத்தனை முறை தான்
பச்சை விளக்கிற்கும்
இரு நீல நிற கோட்டுக்கும்
காத்திருப்பீர்கள்...

இன்னும்
எத்தனை முறை தான்
அந்த வராத
ஒருவரின்
வருகைக்காக
தினமொரு
பூங்கொத்தும்
புன்னகையுமென
காத்திருப்பீர்கள்...

ஆயினும்
சலிக்காமல் காத்திருக்கும்
இந்த
பேரன்பை
கைவிடாது
இன்னும்
எத்தனை நாள் தான்
அவர் உங்களுடையவர்
என்று நம்புவீர்கள்..?

தவிர
நம்பிக்கொண்டு
காத்திருப்பதொன்றும்
அவ்வளவு
சிரமமில்லை தானே
உங்களுக்கும்...

◈ **அலர்மேல்மங்கை**



யாரோ மாட்டுக்குத் தண்ணி காட்டுகிறார்கள்.

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு
கால் கழுவிப் போகிறான் ஒருவன்.

தாவித் தாவி மறுகரைக்குச் செல்கிறது சிறுவனின்
குதூகலம்.

குளித்தால் ஒத்துக்கொள்ளாதென
தலையில் தெளித்துச் செல்கிறான்
தீட்டுக்காரன்.

அழுக்கு, பிதுர் எல்லாமே இரை தானென
நெருங்கிய மீனை, குறி தவறாமல்
அலகில் கவ்விச் செல்கிறது நாரை.

அல்லியோடு சேர்த்து
கரையில் நின்று செல்பி எடுக்கிறது இளங்கூட்டம்.

துணுக்குகள் ஒட்டிய எச்சில் பாத்திரங்களை,
கொசுவத்தைச் சரிசெய்தபடி
கழுவிப் போகிறாள் ஒருத்தி.

வெற்றிக் கட்டாயத்தில்,
படிக்கட்டுச் சருகுகள் விலக்கி
மனனம் செய்கிறவனுக்கான
தவறிய அழைப்புகள்
காற்றில் கலந்துவிட்டன.

வராதவர்களையும் வந்தவர்கள்
சுவட்டில் பதியும்
இந்த நாளெனும் பொய்க்குளத்தில்
பொறுமையாகக் குத்த வைத்துத்
தூண்டிலிடுபவனுக்குக் கடவுளின் சாயல்.

◈ **மா.காளிதாஸ்**



மாயச் சுழற் பலகையில் பதிந்த
நம் உரையாடல்களையெல்லாம்
அழித்துவிட்டாய்

ரேகைகளுக்கிடையில் படிந்த
வியர்வையின் சுவடுகளையும்
துடைத்துவிட்டாய்

உடையின் சுருக்கங்களை
விரல்களால் நீவிச் சரிசெய்கையில்
அதுவரை நிகழ்ந்தவை எல்லாம்
உதிர்ந்ததாய்க் காட்டிக் கொண்டாய்

நான் தந்தனுப்பிய
அந்த ஒற்றைச் சொல்லைத்
தூர எறிந்துவிட்டதாய்ச் சொல்லிக்கொண்டாய்

வாக்கியத்தில் சேராத
அந்தச் சொல்
உன் உடைகளின் அடுக்கில்
ஆழத்தில் கிடக்கிறது
வற்றாத ஆற்றின்
அடிவயிற்றுக் கூழாங்கல்லாக

இப்போது
சொற்களற்ற ஒரு வாக்கியத்தின்
எதிரெதிர்க் கரைகளில்
நின்றுகொண்டிருக்கிறோம்
நீயும்
நானும்

கூழாங்கல்லின் மொழியை
ஆறு பேசிக்கொண்டே தான் திரிகிறது
தினமும்
வேறு வேறு வண்ணங்களில்.

◈ சுப. முத்துக்குமார்



இனி ஒருபோதும்
உன்னிடம் மண்டியிட போவதில்லை
இனி ஒருபோதும்
அன்பிற்காக கையேந்த போவதில்லை
நீ எனக்காக வராத பாதையில்
இனி ஒருபோதும்
நான் உனக்காக காத்திருக்க போவதில்லை
என்ற சபதங்களோடே தொடங்குகிறேன்
என் ஒவ்வொருநாளையும்.
ஆனாலும்,
களராகிவிட்ட இந்த அந்திகளை
நிறைந்து நிற்கும்
உன் நினைவு புற்களைக்கூட
என்னால் அசைக்க முடிவதில்லை.

◈ **தீபிகா நடராஜன்**

மரணம் நிகழ்ந்த வீட்டில்
ஆடி பாடி விளையாடும்
குழந்தைகள்,
முன்பே வந்திருந்தால் தள்ளிப்போயிருக்கலாம்...
தனித்து விடப்பட்ட
தாத்தாவின் மரணம்!

◈ **மு.முபாரக்**

# காதலின் பார்வையில்

1) மழை

நீயில்லாத போது நீயாகவும்
நானில்லாத போது நானாகவும்
மேனி நனைக்கும்
திரவ பிம்பங்கள்.....

2) கடல்

கண்ணுக்கெட்டிய வரை
நீலமும் ஈரமுமாய்
உன்னையும் என்னையும்
பிரதியெடுக்கும் அலையோவியம்....

3) பூமி

உன்னை விட்டு
விலக நினைக்கையில்
இருமடங்கு புவியீர்ப்புடன்
என்னை இழுத்து
உன்னிடம் சேர்க்கும் ஈர்ப்பு விசை....

4) இதயம்

இருக்கும் நான்கு அறைகளிலும்
உன் நினைவுகளை மட்டுமே
சேமித்து வைத்திருக்கும்
உயிருள்ள பெட்டகம்.....

5) ரோஜா

முள் படிக்கட்டுகளை
மெல்ல தாண்டி தாண்டி
உச்சியை தொட்டால்
உன்னிதழ்களின் சாயலில்
மலர்களின் ராணி.....

6) செருப்புகள்

இராஜ்யங்களை ஆண்டாலும்
மரவுரி உடுத்தினாலும்
நாமிருவரும் பிரிந்ததே இல்லையென்பதை
பறைசாற்றும் பாத கல்வெட்டுகள்....

7) தேநீர்

அதிகாலை கண்விழித்ததும்
அந்திமாலை எனை மீட்கவும்
என் தொண்டைக்குள் இறங்கும்
உன் பழுப்பு முத்தம்.....

8) வானம்

எப்போதும் எந்த நிலையிலும்
இரு கைகளையும்
அகல விரித்தபடி
எனக்காக காத்திருக்கும்
முடிவிலி நேசம்.....

9) கனவு

உனைப் பிரிந்து
உறங்கும் வேளைகளில்
உன் உருவ குறும்படங்களை மட்டுமே
ஓட்டி காட்டும் கள்ளித்திரை....

10) கடிகாரம்

பரபரவென்று ஓடும் உனக்கு
பாதுகாப்பாக முதலில்
என் நிழலை அனுப்பிவிட்டு
நிதானமாக உன்னை தொடரும்
ஆயுள்-கடிகை.....

◈ **பிரபுசங்கர் க**





நீண்ட நாள்
பழகியவள் போன்று
சட்டென்று பேச்சு கொடுத்துவிடுகிறாள்
மனம் பிறழ்ந்தவள்
என்னிடம் தான்
சொற்களே இல்லை
அவளுடன் பேசுவதற்கு

**◈ மகேஷ் சிபி**

காலத்தின் கரிக்கோடு
கீறலாகிறது
பீறிடும் உதிரம் பிசுத்த
வீறிடும் விளாறலாகிறது
அண்டம் நோக்கித் தொழ
உவர்மிகுந்து துயரில் அழ
மனமிறங்கி கருணை மேலிட
சற்றே பெரிய
அடுத்த கரிக்கோடு
முன்னது அருவமாகிறது.

**◈ காயத்ரி ராஜசேகர்**



இப்போது நான் ஒரு கடலைப்பற்றி
எழுதத் தொடங்குகிறேன்
நீயதில் கால் நனைத்துச்
செல்கிறாய்

இப்போது நான் ஒரு மலையைப் பற்றி
எழுதத் தொடங்குகிறேன்
எங்கிருந்தோ வந்த நீ
பூப் பறிக்கிறாய்

இப்போது நான் ஒரு வானைப் பற்றி
எழுதத் தொடங்குகிறேன்
வீண்மீன்களுக்குள் உன் விழியையும்
நிலவுக்குள் உனையும்
கச்சிதமாக பூட்டிக் கொள்கிறாய்

இப்போது நான் காற்றைப் பற்றி
எழுதத் தொடங்குகிறேன்
நுரையீரலில் மூச்சாக நீயே
நிரம்பி வழிகிறாய்

இப்போது நான் ஆதிகாலத்தின்
முதற்படிமக் கூறுகளை
எழுதத்தொடங்குகிறேன்
அங்கும் ஆதாமாகவெனையும்
ஏவாளாக உனையும்
உருமாற்றம் செய்கிறாய்

இப்படித்தான் சகி!
தினமும் உனையெண்ணி
பைத்தியக்காரத்தனமாக
நான் ஏதும் கிறுக்கி கொண்டிக்கிறேன்

நீ அதற்குள் மௌனமாக வாழ்ந்து
கொண்டிருக்கிறாய்

◈ **ஆகிஷா**



போர்..
பிரகடணமல்ல
பிரளயம்.

போர்..
ஆறாம் அறிவின் அழிவு.
அற்புத படைப்பின் அவமானம்.
அசூர வளர்ச்சியின் அடையாளம்.

போர்..
தூக்கத்தின் துக்கம்
நம்பிக்கையின் புறக்கணிப்பு
நாட்டாமையின் வெட்கம்.

போர்..
புரட்சியின் கதவடைப்பு
புகழ்ச்சியின் போதை
அழிந்தவர்களின் பாதை.

போர்..
வீரத்தின் சொல் அல்ல
இது அறம் தின்ற
அரக்கர்களின் கொக்கரிப்பு.

போர்..
இது நீதியின் தீர்ப்பல்ல
ஓநாய்கள் வளர்க்கும்
ஆசையின் ஆணவம்.

போர்..
அதிகாரத்தின் உச்சமல்ல
அச்சத்தின் மிச்சமுமல்ல
இது மனிதம் வெறுக்கும்
சாத்தானின் இச்சை.

போர்..
வெற்றி தோல்வி
மட்டுமா தெரிகிறது.
வல்லரசு சீமான்களே..
அன்பின் கதறலும்
உயிர்களின் ஓலமும்
உங்கள் செவிகளை
அறையவில்லையா

உண்ண உணவும்
வாழ வழியும்
காட்டும் இந்த பூமிக்கு
ரத்தம் திணிக்கும்
வேட்டை மனிதர்களே

சண்டைக்கு பின் வரும்
சமாதானங்களில்
நீங்கள் கை குலுக்கிக்கொள்வதை
பார்த்து கைத்தட்ட
பூகம்பம் வந்தால் சிறப்பு
அதோடு..
அழிந்து போகட்டும்
இந்த பூமியின் பொறுமை

◈ நயினார்



சீதையாயிருந்தேன்
சிதைக்குள் இறக்கினாய்!
வெளுப்பவன் சொன்ன அழுக்கு வார்த்தைக்காக
அகண்ட கானகம் அனுப்பினாய்!

ராதையாயிருந்தபோது
பாதியில் விட்டுவிட்டு
மதுராவில் பாமா, ருக்மணியுடன்
சதிராடினாய்!

சகுந்தலை பிறப்பில்
சகலமும் மறந்தாய்!

தமயந்தியாய் வந்தேன்
தனியே வனத்தில் விட்டாய்!

சந்திரமதியாய் உதித்தேன்
சந்தையில் நிறுத்தி
மந்தையாடென விற்றாய்!

எத்தனை பிறவிகளடா?–அதில்தான்
எத்தனை துயரங்களடா?
அத்தனையிலும்
பித்தனாகத்தான் பிறந்தாய்!
எத்தனாகத்தான் இருந்தாய்!

அத்தனைக்கும் சேர்த்து– உன்
மத்தம் கொண்டோராய்
இத்தரைமீதிலே
முத்திரைக் காதலர்களாய்....
மொத்தமாய் வாழ்வோம் வா
காத்திருக்கிறேன்!!

◈ ம.இராதா



விரையும் சைக்கிளின்
பின்னே
தவறி விழுந்த
மீன்காரரின்
பசித்துண்டினை...
கவ்விக்கொண்டு பறக்கிறது
ஒரு காக்கையின் பசி.

உயரப் பறத்தலில்
மண்ணைத் தழுவிய காக்கையின்
பசியை...
தூக்கிக் கொண்டோடுகிறது
ஒரு நாயின் பசி.

எச்சிலில் வடிந்து நீளுகிற
நாயின் பசியை...
பதுக்கப் பார்க்கிறது
ஒரு எறும்பின் பசி.

எறும்பொதுக்கும் அதன் பசியை
அரித்துத்
தின்ன முந்துகிறது...
கரையானின் பசி.

குத்தும் பசியைக் கொத்திப்
புணறும் பசியின்
மீதம் தானே
நாமும் கூட.

◈ அன்பூ



பரணில் எதையோ தேடப்போய்
கையில் சிக்கிய
சமூக அறிவியல் புத்தகத்தில்,

பதினாறாம் பக்கம்
தமிழ் நாட்டு வரைப்படத்தில்,
குறித்து வைத்திருக்கிறேன்,

உன் வீட்டையும்,

நீ என்னை எட்டிப்பார்க்கும்
வாசலொட்டிய சன்னலையும்,

நான் காதலைச் சொன்ன
குளக் கரையையும்,

நீ முதல் முத்தம் கொடுத்த
ஆலமரத்தடியையும்,

நம் பெயரை எழுதி வைத்த
ஊரெல்லை மலை முகட்டையும்,

அப்படியே
ரசித்துச் சுட்டி
மறுபக்கம் புரட்டி
நகருமென் விரல்,

அனிச்சையாய்
நடுங்கியொடுங்கி நிற்கிறது,

அன்று
அப்பாவின் சவர பிளேடில்
விரலைக் கீறி,
ரத்தச் சிகப்பில்
குறித்து வைத்திருக்கும்,

'உனக்கு மணமான மண்டபத்தில்'...

◈ **துளசி வேந்தன்**



நியூட்டனின்
மூன்றாம் விதிப்படி
ஒவ்வொரு வினைக்கும்
ஒரு எதிர்வினை இருக்குமாம் ....
உன்மீதான என் காதலில் மட்டும் எதிர்வினை
இன்றி
பொய்த்ததோ விதி !!

**◈ ஷீபா ராணி**

ஒரு பாறை உடைக்க படுகிறது
எங்கோ கற்பூரம் தயாரிக்கிறார்கள்
எங்கோ மூலையில் தீப்பெட்டி செய்கிறார்கள்
ஒருவன் வேண்டுதலுக்கு தயாராகிறான்...

**◈ கதிரவன் வீ**



உடைத்துப்போட்டாலும்//
பிரதிபலிக்க மறுப்பதில்லை//
இரசம்பூசிய கண்ணாடிகள்//

**இராம வேல்முருகன்**
**வலங்கைமான்**

சாக்கடை அள்ளும் சந்தானத்தின் மகன்
பூணூல் அணிந்து
ஐயருக்கு நேராய் அமர்ந்திருந்தான்
அப்பனது பதினாறாவது நாள் காரியத்தில்...

**அன்பிஷா**

சிறப்பான வீடு புகும் விழா
அழைத்த அனைவரின் வருகையும் சந்தோசத்தின்
கதவுகளை திறக்கின்றது
சிறு கப்பி பாலின் சுவையுடன்
இருக்கும் மனைவிமார்கள்
கணவனை அழைப்பில் எப்போது வருவீர் என
கேட்கையில்
வர இயலாத கணவனை
புகைப்படத்தில் பார்த்து விளக்குத்திரியை
மிகைப்படுத்தி நகர்கிறாள்
வீட்டின் சொந்தகாரி
இல்லாத கணவனின் நினைவு ஒளியின்
வெளிச்சத்தில்......

**சே கார்கவி**

WRC மற்றும் படைப்பு குழுமம் இணைந்து நடத்திய

# மகளிருக்கான மாபெரும் சர்வதேச கவிதைப்போட்டி

## முடிவுகள் அறிவிப்பு

தலைப்பு

## மாண்புமிகு மகளிர்

**முதல் பரிசு**
ஹேமலதா

**இரண்டாம் பரிசு**
வள்ளி கண்ணன்

**மூன்றாம் பரிசு**
யூ. தில்பர் புஷ்பிதா
மோகன சுந்தரி

**சிறப்பு பரிசு**
எஸ்தர் ராணி
ஜே.ஜே. அனிட்டா
ரத்னா வெங்கட்
பாரதி சண்முகநாதன்
கீர்த்தி கிருஷ்
அல்லி பாத்திமா

WAVE BACKGROUND

பரிசு பெற்ற கவிதைகள் இந்த மாத தகவு இதழில் வெளிவரும்